1984 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் கேட்கப்பட்ட தொகை சரியானதுதான். ரூ. 45 கோடி அவர்கள் கொடுத்தார்கள். ரூ. 45 கோடி தரப் பட்டத்தில் மானியமாகக் கொடுக்கப்பட்டது ரூ. 13.7 கோடி. மத்திய அரசு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நான் முதலில் தெரிவித்தபடி இன்று ரூ. 114.8 கோடி செலவு செய்திருக்கிறோம். எடுக்கப்பட்ட வேலைகள் பூர்த்தியாகியுள்ளன. மொத்தம் எடுக்கப்பட்ட வேலைகள் 82,459. அவை பூர்த்தியாகி யிருக்கின்றன. எங்கேயாவது வேலைகள் எடுக்கப்பட்டு முடி வடையவில்லையென்றால், அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பேன்.

தமிழ்நாட்டில் முந்திரி விளைச்சலின் அபிவிருத்திக்கான அரசின் திட்டம்.

47 (*வினா எண் 18035) திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் முந்திரி பயிரிடுவதற்கு உலக வங்கி கடன் வழங்கியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இல்லை. உலக வங்கியின் உதவியுடன் சுமார் ரூ. 3950.46 இலட்சம் மதிப்பீட்டில் முந்திரி அபிவிருத்திக்கான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினாவிற்கும் பதிலளித்து விடுங்கள்.

48 (*வினா எண் 20533) திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் முந்திரி விளைச்சலின் அபிவிருத்திக்கு ஏதேனும் புதிய திட்டத்தை அரசு மேற்கொள்ள உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இந்தக் கேள்விக்கும் அதே பதில்தான்.

(முற்பகல் 9-40)

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் முந்திரி பயிரிடுவதற்காக உலக வங்கியின் மூலம் பெறப்பட்ட கடன், எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு தொகை மாவட்ட வாரியாக செலவழிக்கப்பட் டுள்ளது என்பதையும், எந்த அளவிற்கு மாவட்டங்களில் முந்திரி பயிரிடப்பட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பணம் இன்னும் வந்து சேரவில்லை. அது மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. விரிவான திட்ட மதிப்பீட்டை அனுப்பியிருக்கிறோம். பொதுவாக எல்லா மாவட்டங்களுக்கும் முந்திரி சாகுபடி செய்வது என்ற வகையில் இந்தப் பணம் செலவழிக்கப்படும்.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களுக்கும் அந்தப் பணம் செலவழிக்கப்படும் என்று அறிவித்தார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் தமிழக சர்க்கார் மூலமாக இதற்கு முன்பு முந்திரி பயிரிடுவதற்கு ஏதாவது செலவழிக்கப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 360 ஹெக்டேர் நிலத்தில் முந்திரி பயிரிடப்பட்டிருக்கிறது. தோட்டக்கலைத் துறை மூலமாக இதற்குரிய உதவிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு உருவாக்கியிருக்கிற முந்திரி அபிவிருத்தி ஸ்கீமில், தமிழக அரசுக்கு முந்திரி பயிர் போடுவதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது? எத்தனை கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது? எந்தெந்த மாவட்டங்களில், எத்தனை ஏக்கர் நிலங்களில் பயிரிடுவது என்று அரசு திட்டம் உருவாக்கி உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே ரூ. 3950 46 இலட்சம் என்று சொன்னேன். இதிலே மைய அரசின் உதவியும் அடங்கும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, முந்திரி விளைச்சலை அதிகப்படுத்துவதற்காக ஒரு அபிவிருத்தித் திட்டத்தை வகுத்து, அதற்காக உலக வங்கியின் கடன் கேட்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த அபிவிருத்தித் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு என்பதையும், அதிலே நம் அரசின் பங்கு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமான தொகையைத்தான் நான் குறிப்பிட்டேன். இதைத் தோட்டக் கலைத் துறையின் மூலமாகவும், வனத் துறையின் மூலமாகவும் பயன்படுத்த இருக்கிறோம். இதிலே மைய அரசின் ஒரு பகுதியும், மாநில அரசின் ஒரு பகுதியுமாக நாம் பயன்படுத்த இருக்கிறோம்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்